**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 74/2024**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. செந்தில்குமரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. தங்கவேல்** | **Calling** | : | **தலைமை காவலர் (HC 236), திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **45** |
| | | | **Dated** | : | **16.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 4), **திரு. செந்தில்குமரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2023ம் தேதி அம்பாத்துரை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது, காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்பேரில் குற்ற எண். 146/2022, சட்டப்பிரிவுகள் 294(b), 353, 328, 506(i) இ.த.ச. மற்றும் 6(B), 24(1) COTPA Act வழக்கில் பகுப்பாய்விற்காக எடுத்து வைக்கப்பட்ட மாதிரிகளை மதுரை,

வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். அது சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு செல்லவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு ஒரு வருடம் கழித்துத்தான் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு வழக்கு சொத்தை ஆய்வுக்கு கொண்டு சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஓராண்டு காலமாக வழக்கு சொத்து எங்கிருந்தது என்று கேட்டால், காவல் நிலையத்தில் இருந்தது. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் வழக்கு சொத்தை கொண்டு செல்லவில்லை என்றாலும், என்னுடைய மேல் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 16.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.16 16:20:50 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**